10.03.2026 OS.No.259/2021 PW1 Name :.லட்சுமி

1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். என் தகப்பனார் இறந்த தேதி எனக்கு தெரியாது. என் தாயார் இறந்த தேதி எனக்கு தெரியாது. எனக்கு திருமணமாகி சுமார் 50 ஆண்டுகள் ஆகிறது. என் கணவரை பிரிந்து 25 ஆண்டுகள் ஆகிறது. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் எனக்கு நல்லமுறையில் சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.
2. என் கணவருக்கு மரிமாணிகுப்பம் கிராமத்தில் ஒரு ஏக்கர் சொத்து உள்ளது. என் தகப்பனார் இறந்த பின் 1 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் அனைவரது கூட்டு அனுபவத்தின் சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது. எத்தனை அயிட்டங்களாக சொத்துகள் வழக்கில் காட்டபட்டுள்ளது என்று தெரியாது. வழக்கு சொத்தில் பருத்தி கொட்டை, கடலை ஆகியவை பயிர் செய்யபடுகிறது. அதற்கான செலவினங்கள் விவரம் தெரியாது.
3. பயிர் விற்பனை செய்ததற்கான ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் நான் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் இதுநாள்வரை நான் எந்த பாகமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. சுமார் 4 ஆண்டுகளுக்கு

முன் அவர்களிடம் பாகம் கேட்டேன். சொத்தில் பாகம் கேட்டதற்கு பிரதிவாதிகள் என்னிடம் கொலை மீறட்டல் விட்டார்கள். காவல்நிலையத்தில் அதற்கு புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்தார்கள். பதில் அறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகள் சரியானவை கிடையாது. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.10 16:14:06 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.